1995 மார்ச் 15]

13—

சேலம், ஆத்தூர் பகுதியில் சர்க்கரை ஆலை அமைத்தல்

22469*—திரு. வெ. தமிழரசு:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், ஆத்தூர் பகுதியில் சர்க்கரை ஆலை ஒன்று துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

முற்பகல் 10-45

திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் நகர மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கி தேர்தலின்போது இதய தெய்வம் அம்மா அவர்கள் வாக்குறுதி அளித்படி மேட்டூர்-ஆத்தூர் குடிநீர் திட்டத்தை 62 கோடி ரூபாய் செலவில் நிரந்தரமாக நிறைவேற்றிய தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் ராஷ்டிரிய பீஷ்மாச்சாரி டாக்டர் புரட்சி தலைவி அவர்களின் பொன்னான பொற்பாதங்களை வணங்கி எனது தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியை காணிக்கையாக்கி தமிழகத்தின் ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, நலிவடைந்த மக்களுக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்களுக்கு, விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு, நெசவாளர்களுக்கு, தாய் உள்ளத்தோடு; சேவை உள்ளத்தோடு; தொண்டு உள்ளத்தோடு; இறை உள்ளோத்தோடு இதய தெய்வம் அம்மா அவர்கள் நல்லாட்சி செய்வதால் தான் 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்னும் ஔவையாரின் பொன்னான வாக்குக்கு ஏற்ப இன்றைக்கு நல்ல மழை பெய்து வறண்டு கிடந்த வசிஸ்ட்டா நதி ஆத்தூரில் 3 ஆண்டுகளாக 5 முறை வெள்ளப் பெருக்கு எடுத்து ஓடி ஜெ. ஜெ. -வென நெல்லும்; ஜெ. ஜெ. -வென கரும்பும் பல ஆயிரக்கணக்கான

ஏக்கரில் கடந்த 3 ஆண்டுகளாக நல்ல விளைச்சல் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். விவசாயக் கூலித் தொழிலாளர்கள் 50 ரூபாய், 60 ரூபாய் என்று கூலி பெறுகின்றார்கள். ஆகவே, இந்த ஆத்தூர் பகுதிக்கும், ஆத்தூர், தலைவாசல், சின்னசேலம், ஏற்காடு, பனமரத்துப்பட்டி ஆகிய தொகுதிகளிலுள்ள விவசாய மக்களின் நீண்டநாள் கனவான இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை அமைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய ** அண்ணன் சின்னசாமி அவர்கள் பரிசீலிப்பாரா என அன்போடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தமிழரசு அவர்களால் சொல்லப்பட்டதை நான் ஏற்றுக்கொண்டால், நான் பேசாமல்தான் அமர வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்கவேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் அரவைத் திறனான, நாளொன்றுக்கு 2,500 டன் கரும்பை அரைக்கக்கூடிய, சுமார் 5,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல் நாளொன்றுக்கு 2,500 டன் நல்ல தண்ணீர் கிடைக்க வேண்டும், மூலதனமாக குறைந்தபட்சம் 50 கோடி ரூபாய் நிதி வேண்டும். சேலம் மாவட்டத்தில் தற்போது மொத்தம் 9,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் கரும்பு பயிராகின்றது. இந்தக் கரும்புகளெல்லாம் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும். பொன்னி சர்க்கரை ஆலைக்கும். பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்கும், சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கும் சப்ளை செய்யப்படுகின்ற காரணத்தாலே, ஆத்தூர் பகுதியிலே புதிதாக சர்க்கரை ஆலை அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறு இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் ஆத்தூர் வட்டத்தில் தற்போது கரும்பு விவசாயிகள் அக்ரிமெண்ட் செய்துள்ள கரும்பையாவது மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா என, பெயரிலே

** **மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.**

1995 மார்ச் 15]

சின்னசாமியாக இருந்தாலும், காரியம் நிறைவேற்றுவதில் பெரியசாமியான அண்ணார் அவர்களை, தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். *(சிரிப்பு)*

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் என்ன ஐஸ் வைத்தாலும் நிச்சயமாக காரியம் சட்டத்திற்கு விரோதமாக நடைபெறாது. *(சிரிப்பு)* நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கருணையின் காரணமாக கரும்பு விவசாயிகளுக்கு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிக விலையை சென்ற ஆண்டு கொடுத்தோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த ஆண்டும் கொடுத்திருக்கிறோம். சென்ற ஆண்டு அதிக விலை கொடுத்த காரணத்தினாலே ஏராளமான பேர் கரும்பைப் பயிரிட்டு விட்டார்கள். இந்த ஆண்டு மாத்திரம் 18 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இருக்கக்கூடிய கணக்குக்கு பதிலாக 11 இலட்சம் டன் கரும்பு அதிகமாக இருக்கிறது. காரணம், நல்ல விலை கொடுத்த காரணத்தாலேதான். ஆகவே, அதிகமாக கரும்பு இருக்கிற காரணத்தாலே, தனியார் ஆலை முதலாளிகளிடத்திலே கரும்பை எடுத்துக்கொள்ளச் சொல்லி கேட்டு இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், வழக்கத்திற்கு மாறாக, இந்த ஆண்டு 3 மாத காலத்திற்கு எல்லா சர்க்கரை ஆலைகளுடைய அரவைப் பருவத்தை நீட்டித்து எல்லா கரும்புகளையும் வெட்டி எடுத்து சர்க்கரையாக ஆக்குவதற்கு நிச்சயமாக முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். அப்போது மோகனூர் சர்க்கரை ஆலைப் பகுதியிலே இருக்கிற எல்லா கரும்புகளும் எடுத்துக் கொள்ளப்படும் என்று நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

14—

திருப்பூரில் தொழிற்சாலை மேம்பாட்டிற்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டம்

26528*—திரு. வெ. பழனிசாமி:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—